**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2021 செத்தெம்பர் 13 | சுற்றறிக்கை | 2021இன் 10ஆம் இலக்கம்**

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலா தொழில் துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனியாட்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை நீடித்தல்**

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சுற்றுலா தொழில் துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள் மற்றும் தனியாட்களினால் எதிர்நோக்கப்பட்ட சவால்களை அவர்கள் எதிர்கொள்ளச் செய்யும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) 2020 ஓகத்து 26ஆம் திகதியிடப்பட்ட 2020இன் 8ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ், சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை கீழே குறித்துரைக்கப்பட்டவாறு 2021 ஒத்தோபர் 1 இலிருந்து ஆரம்பமாகின்ற மேலுமொரு ஒன்பது மாத காலப்பகுதிக்கு (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பிடப்படும்) நீடிக்குமாறு கேட்டுக் கொண்டது. எனினும், உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளரின் கோரிக்கையின் பேரில் வேறு ஏதேனும் தேர்வுகளையும் வழங்கலாம்; எனினும், கடன்பாட்டாளர்களுக்காக அவ்வாறு வழங்கப்படுகின்ற ஒட்டுமொத்த நன்மைகள் இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படுகின்றவற்றினை விடக் குறைவானவையாக இருக்கக்கூடாது. இதற்கமைய, இச்சுற்றறிக்கையானது அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளிடையேயும் ஒரே சீரான தன்மையில் இத்திட்டத்திற்குக் காத்திரமான தன்மையினை வழங்கும் பொருட்டு விடுக்கப்படுகிறது.

**அ.** 2020இன் 8ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பின்வரும் ஏற்பாடுகள் திருத்தப்பட்டிருப்பதுடன் 2020இன் 8ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் மற்றைய ஏற்பாடுகள் மாற்றமின்றி தொடர்ந்துமிருக்கும்.

1. **பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்**

1(i) (ஆ) கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தகைமையுடைய வியாபாரங்களின் ஊழியர்கள் மற்றும் தகைமையுடைய சங்கங்களின் உறுப்பினர்கள். அத்தகைய ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், மேலே (அ)இல் குறிப்பிடப்பட்ட தொடர்பான நிறுவனங்களுடன் வியாபாரங்கள் அல்லது சங்கங்கள் செய்து கொண்டுள்ள பதிவுகள் போதுமானவையாகக் கருதப்படல் வேண்டும்.

1(iii) படுகடன் சட்ட இசைவுத்தாமதமானது, மூலதனம் மற்றும் வட்டி இரண்டிற்குமாக 2021 ஒத்தோபர் 1 இலிருந்து தொடங்கி 2022 யூன் 30 வரையான மேலும் ஒன்பது மாத காலப்பகுதிக்கான சட்ட இசைவுத்தாமதத்தினைக் குறிக்கிறது.

1(iv) சட்ட இசைவுத்தாமத்தினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய கடன் இசைவுத்தாமதத்தினைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளிடம் 2021 ஒத்தோபர் 15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கோரிக்கையொன்றை விடுத்தல் வேண்டும். 2021 ஒத்தோபர் 15 இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் கோரிக்கைகளைப் பொறுத்தவரை, அத்தகைய கோரிக்கையினைத் தாமதமாகச் செய்வதற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பின், அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. கடனை மீளச் செலுத்துவதற்கு இயலாற்றலைக் கொண்டுள்ள எவரேனும் தகைமையுடைய

கடன்பாட்டாளர்கள் இந்நீடிப்பிற்கு கோரிக்கை விடுப்பதற்குப் பதிலாக அத்தகைய கடனை மீளச் செலுத்துதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**2. படுகடன் சட்ட இசைவுத்தாமத்தினைச் சீரமைத்தல்**

2(i) 2021 ஒத்தோபர் 1 இலிருந்து தொடங்கி 2022 யூன் 30 வரையான சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையும் வட்டியையும் உரிமம்பெற்ற வங்கிகள் தவணைக் கடனொன்றிற்கு மாற்றுதல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் முன்னர் வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையும் வட்டியையும் 2021 ஒத்தோபர் 1 இலிருந்து 2022 யூன் 30 வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனம் மற்றும் வட்டியுடன் ஒன்றுசேர்த்தல் வேண்டும்.

2(ii) உரிமம்பெற்ற வங்கிகள் அவ்வாறு மாற்றப்பட்ட கடன்களை நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் முடிவடைந்ததும் அறவிடத் தொடங்கலாம்.

2(v) இச்சுற்றறிக்கையின் கீழ், உரிமம்பெற்ற வங்கிகள் செயற்படுகின்ற கடன்களாகக் கருதப்பட்டவை தொடர்பில், 2021 ஒத்தோபர் 1இல் உள்ளவாறான ஒன்றுசேர்ந்த மற்றும் செலுத்தப்படாத தண்ட வட்டி ஏதுமிருப்பின் அவற்றைத் தள்ளுபடி செய்தல் வேண்டும். சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் தண்ட வட்டியை விதிக்கவோ அல்லது ஒன்றுசேர்க்கவோகூடாது.

**3. அறிக்கையிடல் தேவைப்பாடு**

உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் பற்றிய விபரங்களை 2020இன் 8ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் விபரிக்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதியிலுள்ளவாறு 15 வேலை நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு தொடர்ச்சியாக அறிவித்தல் வேண்டும்.

**ஆ.** இச்சுற்றறிக்கையில் பின்வரும் புதிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

(1) மாற்று ஏற்பாடொன்றாக, உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் ஏற்றுக்கொள்ளத்தக்க புத்துயிரளித்தல் திட்டத்தினையும் பரிசீலனையில் கொண்டு தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை நீண்ட காலப்பகுதியொன்றிற்கு சீரமைத்துக் கொள்ளலாம். இவ்விடயத்தினைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும், தற்பொழுது நிலவுகின்ற குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொண்டு சலுகை வட்டி வீதம் உட்பட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் இணக்கப்பாடொன்றிற்கு வருதல் வேண்டும்.

(2) தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் இச்சுற்றறிக்கையின் கீழ் சட்ட இசைவுத்தாமதத்தினைத் தெரிவுசெய்வதற்குப் பதிலாக, தற்போதுள்ள கடன் வசதிகளை அல்லது சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்த வேண்டிய தொகைகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு அவர்/ அவள் தமது விருப்பத்தினைத் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில் உரிமம்பெற்ற வங்கிகள் வட்டி வீத தள்ளுபடிகளை வழங்குவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் உரிய காலத்திற்கு முன்னரான தீர்ப்பனவுக் கட்டணத்தினையும் குத்தகை வசதிகளின் எதிர்கால வட்டி ஏதுமிருப்பின் அவற்றின் அறவிடல் உள்ளிட்ட விதிப்புக்களையும் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

(3) உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய வசதிகள் 2020 ஏப்பிறல் 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருக்குமிடத்து அத்தகைய செயற்படா வசதிகளுக்கெதிரான அனைத்து வகை அறவிடல் நடவடிக்கைகளையும் 2022 யூன் 30 வரை இடைநிறுத்துதல் வேண்டும். மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளர்களை அளவுக்கதிகமாக தொடர்பு கொள்வது/ கட்டாயப்படுத்துவது அல்லது மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர் தொடர்பில் கிரமமான சேகரிப்பு நடைமுறையொன்றின் பகுதியாக அவரிடம் விஜயம் செய்வது என்பன தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். அறவிடல் தொடர்பில் நீதிமன்றங்களில்

வழக்காடல்கள் இடம்பெற்றுவரும் சந்தர்ப்பங்களில் கடன்பாட்டாளர் இச்சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றத்துடன் உடன்படிக்கையொன்றினைச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

(4) உரிமம்பெற்ற வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைக்கான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ.நி.9: நிதியியல் சாதனங்களைப் பின்பற்றுவது தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கிணங்க கணக்கீடு செய்தல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் சுற்றுலாத் துறையினை இடர்நேர்வினை அதிகரிக்கின்ற துறையாக அடையாளம் கண்டு அதற்கேற்ப நடந்து கொள்ளுதல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் இது தொடர்பில் மேலதிக வழிகாட்டல்/ தெளிவுபடுத்தல் பற்றி இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் கணக்காய்வாளர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(5) உரிமம்பெற்ற வங்கிகள் பல்வேறுபட்ட மீள்நிதியிடல் அல்லது வட்டி உதவுதொகை திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்காக சலுகைகளை வழங்குவது பற்றி தொடர்பான முகவர்களிடமிருந்து தேவையான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(6) உரிமம்பெற்ற வங்கிகள் கொடுகடன் வசதிகளைப் பிற்போடுவது அல்லது மறுசீரமைப்பது பற்றி, ஒப்புதலுக்கு முன்னரேயே கடன்பாட்டாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பத்தினை நிராகரிப்பது தொடர்பான விடயத்தினைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கிகள் சாத்தியமானளவிற்கு 14 நாட்களுக்குள் எழுத்து மூலமாக/ இலத்திரனியல் ஊடகம் மூலமாக அத்தகைய நிராகரிப்பதற்கான காரணங்களுடன் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய நிராகரிப்பிற்கெதிராக கடன்பாட்டாளர் பணிப்பாளர், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கிக்கு இதனை மீளாய்வு செய்யுமாறு கோருவதற்கான சந்தர்ப்பமும் காணப்படுகிறது. உரிமம்பெற்ற வங்கிகள் நிராகரிக்கின்ற அதே கடிதத்தின் மூலமாக கடன்பாட்டாளர் விரும்புமிடத்து, மீளாய்வு வசதிகளை விண்ணப்பதாரி அவராகவே சரியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு உரித்துடையவராக இருக்கின்றார் என்பது தொடர்பில் ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

(7) உரிமம்பெற்ற வங்கிகள் இச்சுற்றறிக்கையினை 3 நாட்களுக்குள் அனைத்துக் கிளைகளுக்கும் சுற்றோட்டப்படுத்தல் வேண்டும் என்பதுடன் தேவையான உள்ளக வழிகாட்டல்களை/ சுற்றறிக்கைகளை 7 நாட்களுக்குள் வழங்குதலும் வேண்டும்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்